# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 02.04.2025**

**முன்னிலை**

**திரு ரா.பிரியகுமார், B.Sc.,B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-6475/A/2024**

திரு.S.கருப்பசாமி -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர் ,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை -- பொது அதிகார அமைப்பு
தாம்பரம் மண்டலம்,
சென்னை-600 005.

# ஆணை

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | திரு.S.கருப்பசாமி, நேரில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.K.விஜயலட்சுமி,<br>பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,<br>உணவுப்பொருள் வழங்கல் மற்றும்<br>நுகர்வோர் பாதுகாப்புத் துறை<br>நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 18.12.2023 |
| மனுதாரர், தாம்பரம் வட்டம், மாடம்பாக்கம் ரேசன் கடையில் உள்ள மொத்த குடும்ப அட்டை பற்றிய விவரங்கள், மிக்ஜாம் புயல் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது தொடர்பான தகவல்கள் போன்றவற்றை 5 இனங்களில் கோரியுள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 28.12.2023 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 09.01.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 09.02.2024 மற்றும் 13.02.2024 |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 16.05.2024 |
| விசாரணை அழைப்பாணை நாள் | 02.04.2025 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், மிக்ஜாம் புயல் நிவாரணம் தனக்கு அளிக்கப்படவில்லை என்றும், தனக்கு மிக்ஜாம் புயல் நிவாரணத் தொகை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை வைத்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் திருமதி.K.விஜயலட்சுமி, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தாம்பரம் மண்டலம், சென்னை-45 அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் ந.க.எண்.அ1/2177/2023, நாள் 28.12.2023 கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக தகவல்கள் வழங்கியதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அதில், கடையில் உள்ள மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையை மட்டும் தெரிவித்தார். மேலும், அரசாணை (நிலை) எண்.584, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை. நாள். 12.12.2023-ன்படி அதற்குரிய பட்டியலினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை தயார் செய்தது என்றும், அந்த பட்டியல் தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனத்தின் வாயிலாக, நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் பெறப்பட்டது என்றும், அந்த பட்டியல் எதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்ற விவரம் தங்கள் அலுவலகத்தில் இல்லை என்றும் பொதுத்தகவல் அலுவலர் தெரிவித்தார்.

4. **மிக்ஜாம் புயல் நிவாரணத் தொகை தனக்கு கிடைக்கப் பெறவில்லை என்று மனுதாரர் கருதினால், வருவாய்த் துறையை நாடி, உரிய பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.**

5. மனுதாரரின் தகவல் கோரும் பிரிவு 6(1)-ன் கீழான மனு, பொதுத் தகவல் அலுவலரின் வாதுரை ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், **மனுதாரர் கோரிய இனங்களுக்கு உரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் வழங்கியுள்ளதாக ஆணையம் ஏற்று, இந்த மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா.பிரியகுமார்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA-6475/A/2024**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தாம்பரம் மண்டலம்,
சென்னை-45.

**மனுதாரர்**
திரு. S.கருப்பசாமி,
த/பெ.சுப்பையா,
E-4, அந்தோணி பிளாட்,
சாந்தா நகர், மாடம்பாக்கம்,
சென்னை 600 126.

KRM/PA 09.04.2025